நாள்.25.02.2025

**அசல் வழக்கு எண். 22/2010**

**பெயர்.அப்பாசாமி**

**த.பெ. சுந்தரராஜ பிள்ளை**

**<u>வா.சா.2- 8 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

கிரைய ஒப்பந்த பத்திரத்தில் அனுபவம் சண்முக தேவர் அனுபவத்தை என் அப்பாவிடம் கொடுத்ததாக இல்லை என்றால் சரிதான் . ஒப்பந்த தேதியில் மாரியம்மாளும் சண்முக தேவரும் தஞ்சாவூரில் வசித்து வந்தார்கள் என்றால் ஆமாம் . அவர்களுக்கு மகாராஜ சமுத்திரத்திலுள்ளசொத்தை பார்த்துக்கொள்ள சிரமமாக இருந்தது என்றால் ஆமாம் . ஓட்டல் தொழில் நடத்தி வந்தார்கள் . அதனால் வழக்கு சொத்தை பார்த்துக்கொள்ள என் அப்பா சுந்தரராஜிடம் வழக்கு சொத்திற்கு பக்கத்தில் இருந்ததால் சாகுபடி செய்ய கொடுத்தார்கள் என்றால் இல்லை . என் தந்தைதான் வழக்கு சொத்தில் சாகுபடி செய்து வரவு செலவுகளை பார்த்தார் என்றால் இல்லை.ஒப்பந்தத்திற்கு பிறகு தான் என் அப்பா சாகுபடி செய்தார் . சண்முக தேவருக்கு நம்பிக்கை உள்ள நபராக இருந்ததால் தாவா சொத்துகளை எனது தந்தை நிர்வாகம் செய்து வந்தார் என்றால் ஒப்பந்தம் போட்ட பிறகுதான் நிர்வாகம் செய்தார் . தாவா சொத்துகள் நஞ்சை சாகுபடி நிலம் என்றால் நஞ்சை ,புஞ்சை நிலம். நஞ்சை , புஞ்சை நிலத்திற்கு வருமான வரி இருந்ததா என்றால் ஆமாம் . அந்த வருமான வரியை சண்முக தேவர் செலுத்தி வந்தார் என்றால் தெரியாது . வருமான வரி பாக்கி இருந்ததால் சண்முக தேவருக்கு வருமான வரித்துறையிலிருந்து ஒரு நோட்டீஸ் வந்தது என்றால் ஆமாம் . அந்த நோட்டீஸ் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியிடப்படுகிறது. சண்முக தேவர் இறந்த பிறகு அவரது மகன் 5 ம் பிரதிவாதி நாகராஜனுக்கு வருமான வரித்துறையிலிருந்து ஒரு நோட்டீஸ் வந்தது என்றால் ஆமாம் . என்னிடம் வந்து கொடுத்தார். வருமான வரி பாக்கியை சண்முக தேவர் இறந்த பிறகு அவரது மகன்கள் செலுத்தி வந்தார்கள் என்றால் இல்லை . சண்முக தேவர் பெயரிலும், நாகராஜன் பெயரிலுன் என் தந்தை செலுத்தினார் . நான் செலுத்திய ரசீதுகள் அனைத்தும் சண்முக தேவர் சொத்தை நிர்வாகம் செய்த அடிப்படையில்தான் செலுத்தி வந்தோம் என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ன் படி அனுபவம் என்னிடம் ஒப்படைக்கப்படவில்லை . வா.சா.ஆ.1 ன் படி நான் அனுபவத்தில் இருந்துவருவதாக சொல்வது பொய் என்றால் ஒப்பந்தத்திற்கு பிறகு வரி செலுத்தி நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம் .

வா.சா.ஆ.1 ல் ஏற்பட்ட காலத்தில் மங்களாம்பிகா ஓட்டலில் சண்முக தேவருக்கு நல்ல வருமானம் வந்ததா என்றால் தெரியாது . மங்களாம்பிகா ஓட்டலில் இருந்தும் தாவா சொத்திலிருந்தும் சண்முக தேவருக்கு நல்ல வருமானம் வந்தது அதனால் சொத்தை விற்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் தஞ்சாவூரிலிரு ந்து அவரால் பார்க்கமுடியவில்லை என்பதால்தான் புரோக்கர் மூலம் என்னிடம் விற்றார் .புரோக்கர் மூலமாக தான் என்னிடம் விற்பனை செய்தார் என்று என்னுடைய வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை . ஒப்பந்தத்தில் கையெழுத்து வாங்கியுள்ளேன். தாவா சொத்துகள் என்னுடைய அனுபவத்தில் இல்லாததால்தான் சுவாதீன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் நான் தான் அனுபவித்து வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள ரசீதுகளும் , கிஸ்து ரசீதுகளும் என்னுடைய அனுபவத்தை நிருபிக்க கூடியது அல்ல என்றால் நாங்கள் அனுபவித்து வந்ததால்தான் எங்கள் பெயரில் ரசீதுகள் உள்ளது . நான் பொய்யாக சொல்கிறேன் . தாவா சொத்தை நிர்வாகம் செய்ததிலிருந்து வந்த வருமானத்தை கொண்டும் , சண்முக தேவர் கொடுத்த பணத்தை கொண்டும், சண்முகத்தேவருக்காக நான் செலுத்தி வந்தேன் என்றால் இல்லை . தாவா சொத்துகளுக்கு பட்டா விசாரணை நடந்ததா என்றால் 1980 ல் நடந்தது. 1980 ல் பட்டா விசாரணை நடந்தது பற்றி ஏதேனும் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பட்டா விசாரணை ஏதும் நடக்கவில்லை, வழக்கிற்காக பட்டா விசாரணை நடந்ததாகவும் பட்டா விசாரணையை காரணம் காட்டி சண்முக தேவர் கிரைய பத்திரம் எழுதிக்கொடுக்க முடியவில்லை என்ற காரணத்திற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை . சண்முக தேவர் 1984 ல் இறந்துவிட்டார் அவரால் சாட்சி சொல்ல வரமுடியாது என்பதால் நான் பொய்யாக சொல்கிறேன்என்றால் இல்லை . சண்முக தேவர் இறந்தபிறகு அவருடைய மனைவி மாரியம்மாளிடம் கிரைய பத்திரம் எழுதி கொடுக்க கேட்டதற்கு என் கணவர் இறந்து ஒரு வருடம் வெளியே வரமாட்டேன் என்று சொன்னதாக கூறியுள்ளேன். அவ்வாறு ஒரு சம்பவமே நடக்கவில்லை என்றால் இல்லை . அந்த சம்பவம் நடந்தது உண்மை . 2002 ல் நானும் எனது சகோதரர்களும் 1 முதல் 5 எதிர்வாதிகளை சந்தித்து கிரைய பத்திரம் எழுதி கொடுப்பதாக கேட்தற்கு நாங்கள் வெவ்வேறு இடத்தில் வசிப்பதால் அவர்களால் எழுதி கொடுக்க முடியவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் நான் மாரியம்மாளிடம் தான் கேட்டேன் . 2 முதல் 5 எதிர்வாதிகளிடம் கேட்கவில்லை. நான் சண்முக தேவர் மற்றும் மாரியம்மாளிடம் எத்தனை முறை கிரைய பத்திரம் எழுதி கொடுக்க சொல்லி கேட்டேன்என்றால் குறிப்பாக சொல்ல முடியாது பல முறை கேட்டேன். அதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை . நான் கடந்த 35 வருடமாக எந்த நடவடிக்கையும் எடுக்காததற்கு காரணம் ஒப்பந்தம் பொய் என்பதால் எதிர்வாதிகள் வெளியூரில் இருப்பதால் என்னிடம் அனுபவத்திற்காக ஒப்படைக்கப்பட்ட சொத்தை அபகரித்து கொள்ள வேண்டும் என்ற கெட்ட நோக்கில் இந்த ஒப்பந்தத்தை உற்பத்தி

செய்துள்ளேன் என்றால் இல்லை . சண்முக தேவருக்கு 2 முதல் 5 பிரதிவாதிகளை தவிர மகள்கள் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும்.4 மகள்கள். ஆனால் 3 மகள்களை தான் தெரியும். 06.12.2022 ல் மகாதேவி கொடுத்த பதில்உரையில் சண்முக தேவருக்கு ராஜேஸ்வரி என்ற மகளும் உள்ளார் என்று சொல்லியுள்ளார் என்றால் ஆமாம் . அவரை வழக்கில் தரப்பினராக சேர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் ஆமாம் . எதிர்வழக்குரையில் சொத்து விவரம் தவறு என்று சொல்லியுள்ளார் என்றால் இல்லை . நான் தாக்கல் செய்துள்ள பிராதில் 6 வது அயிட்டமாக 412/6 ல் 67 2/3 செண்டு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். 13 வது அயிட்டத்தில் 412/6 ல் 1.27 2/3 செண்டு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம் . அயிட்டம் 16-18 வரையில் 412/6 சர்வே எண் தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம் . இந்த சொத்திற்கு நான்கெல்லை குறிப்பிடவில்லை என்றால் ஆமாம் . ஒரு சொத்தை விற்பதற்கு முழு விஸ்திரணம் குறிப்பிட்டால் நான்கெல்லை சொல்ல தேவையில்லை . ஆனால் ஒரு பகுதியை விற்பனை செய்தால் நான்கெல்லை குறிப்பிட வேண்டும் என்றால் சண்முக தேவர் ஒவ்வொருவரிடமும் இருந்து தனித்தனியாக கிரையம் வாங்கியுள்ளார் . சண்முக தேவர் ஒவ்வொருவரிடமும் இருந்து தனித்தனியாக கிரையம் வாங்கிய கிரை பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மாரியம்மாளும் சண்முக தேவரும் தனித்தனியாக கிரையம் வாங்கியுள்ளார்கள் என்றால் ஆமாம் . தனித்தனியாக கிரையம் வாங்கியதை என்னுடைய ஒப்பந்தத்தில் தனித்தனியாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை . பட்டுக்கோட்டை சார்பு நீதிமன்றத்தில் 8 ம் பிரதிவாதி மகாதேவி அ .வ.எண்.100/2023 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம் . என்னிடம் காட்டப்படுவது அதன் பிராது நகல் என்றால் ஆமாம். அ.வ.எண்.100/2023 ன் பிராது நகல் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியிடப்படுகிறது. அதில் நான் பதில் உரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம் .அந்த பதில் உரை **பி.வா.சா.ஆ.3** ஆக குறியிடப்படுகிறது. அந்த பதில் உரையில் தாவா சொத்துகளும் அதன் பூஸ்துதி அமைப்பும் வெவ்வேறாக உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம் . அந்த வழக்கில் உள்ள சொத்துகள் தான் இந்த வழக்கின் சொத்துகள் என்றால் ஆமாம்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
*by him/her to be Correct.*

Sd./S.Kavipriya,B.A.L.L.B

District Munsif, Pattukkottai.